# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,037 — 1934 ம் ௵ பங்குனி௴ 16 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரம்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஹல்துமுல்லையிலுள்ள விடுதிவீட்டின் இரம்மியந்தருந் தன்மைகளைக் காப்பாற்றுதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப் படும் காணியை, அஃதாவது :—

கடைசிக் கிராமப்படத்து இல. 296, அட்டவணை இல. 1. குறிச்சி—கல்லாட்டுத்தென்னை, கந்தபல்லே கோறளை, வதுளை டிஸ்திறிக்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 12A | தானயமேவத்தை .. | வெளியான வெறுந்தரை—இதில் கற்சுவர் தகரமுகடு கொண்ட உறுதியாயுள்ள கட்டடத்தின் (கராச்) பகுதி உண்டு | கோறகுண கதிர்காம கோவில் மேற்பார்ப்புக் காவலர்கள் (கராச் கட்டப்பட்டது ஊவா புறவின்ஷியல் றோட் கொம்மிற்றி) | 0 0 19·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ௵ வைகாசி மாசம் 16 ந் தேதியிலன்று 10.30 மணிக்கு கல்டுமுல்லை கிராமக்கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1934 ம் ௵ பங்குனி௴ 12 ந் உ.

கால்டன் எஸ். கொறயா,
உதவி அரசாட்சி ஏசண்டு, ஊவா.

---

### காணி நிர்ணய முன்னறிவித்தலைக் குறித்த விளம்பரம்.

#### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 739 (மாத்தளை).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1934 ம் ௵ (மார்ச்) பங்குனி௴ 16 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1934ம் ௵ (ஜனவரி) தை௴ 11 ந் தேதியிலன்று மாத்தளைக் கச்சேரியிற் கொடுக்கப்பட்டது.

டபிள்யு. ஓ. ஸ்ரீவன்ஸ்,
உதவி அரசாட்சி ஏசெண்டவர்கள், மாத்தளை.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மாத்தளை உதவி அரசாட்சி ஏசண்டவர்களிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

### அட்டவணை.

மத்திய மாகாணத்தில், மாத்தளை ஜில்லாவில், மாத்தளை கிழக்குப் பிரிவின் கங்கள பல்லேசியாப் பற்றில் எலகெரா எனனுங் கிராமத்திலுள்ள கீழ்க்கண்ட துண்டுகள் :—

பிரதமபடம் A 94.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | மலிகாதென்னே அல்லது மலிகாவத்தன புகோடெல்ல .. | .. 0 | 1 | 28 |
| 2 | ஷை .. | .. 8 | 1 | 34 |
| 3 | ஷை .. | .. 11 | 1 | 28 |
| | மொத்தம் .. | 20 | 1 | 10 |

எல்லைகளாவன : வடக்கே-முடிக்குரிய வெகெரகொடமுகலான ; கிழக்கே-அம்பன்கங்கே ; தெற்கே-கொங்காதேஓய ; மேற்கே-கொங்காதேஓயவும் முடிக்குரிய வெகெரகொடமுகளான.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

இத்தாலறிவிப்பது வடமாகாண ஏசண்டர் அல்லது உதவி ஏசண்டரால் யாழ்ப்பாணக் கச்சேரியில் பின்னுற் சொல்லப்படும் துறை ஆயக்குத்தகை 1934 ம் ஆண்டு பங்குனி மாதம் 24 ந் திகதி தொடக்கம் புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரைககும் விலைக்கு வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் 1934 ம் ஆண்டு பங்குனி மாதம் 23 ந் திகதி வெள்ளிக்கிழமை மத்தியானம் 12 மணியளவில் ஏற்கப்படும்.

காரைதீவு.

2. ரூபா 50 கச்சேரியில் அல்லது திறைசேரியில் கட்டியதற்கு அத்தாட்சியாக பெற்றுக்கொண்ட றிசீட்டுடன் ஒப்பந்தப் பத்திரங்கள் கேள்விக்காரரால் நேரே கொடுபடவேண்டும். கேள்விக்காரன் அல்லது விலைவைப்போன் தனது கேள்வியின்படி துறை ஆயக்குத்தகை விலைக்குக் கொடுக்கப்படுமென்று தீர்மானித்தவுடன் கேள்வித்தொகையின் பத்திலொரு பங்கைக் கட்டவும் விற்பனவு நிபந்தனைகளுக்குக் கையொப்பமிடவும், அல்லது தேவையென்று காணும் பிணையைக் கேட்கும் நேரம் கொடுக்கவும் தவறினால் ஒப்பந்தக்கேள்விக்காகக் கட்டிய பணமும் கேள்வித்தொகையின் பத்திலொரு பங்கின்பேரால் கட்டிய பணமும் இழந்துபோவதுமன்றி தனது பெயரையும் குத்தகைப் பொருத்தங்களின்படி செய்யத் தவறியவர்களின் இடாப்பிலும் பதிவுசெய்வதற்கு ஏதுவாகும். ஒப்புக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன அல்லது விலைவைப்போன் விற்பனவு நிபந்தனைகளுக்குக் கையெழுத்திட்டபின் கேள்விககாரர் கட்டிய பணம் திருப்பிக் கொடுக்கப்படும். தபால் மார்க்கமாக அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்களும் குறிக்கப்பட்ட திகதிகும் நேரத்திற்கும் பின் கிடைக்கும் கேள்விப்பத்திரங்களும் கவனிக்கப்படமாட்டாது.

3. ஒப்புக்கொள்ளப்படும் கேள்விக்காரன் கேள்வித்தொகையிற் பத்திலொன்று காசாய் உடனே கட்டவேண்டும். உத்தம தேசாதிபதியவர்களால் கேள்வி ஏற்கப்பட்டால் கேள்விக்காரன் தனககு அதைப்பற்றிய அறிவித்தல் கிடைத்த 20 நாட்களுள் அரைவாசித் தொகைக்கு அனுமதி பெற்ற ஆதனப் பிணையேனும் காசாய் கேள்வித் தொகையில் மூன்றிலொரு பங்கு பிணையேனும் கட்டவேண்டும்.

4. கவண்மேந்து ஏசண்டர் விற்பனவிலன்று தீர்மானிக்கிற பிரகாரம் பாதைகளைப் பழுதுபார்ப்பதற்கு வேண்டிய பணத்தைப் பிணையாகக் கேள்விக்காரன் கட்டவும் வேண்டும.

5. முடிக்குரிய தரணி பிணையாகக் கொடுபடும் உறுதிமுதலியவைகளைப் பரிசோதிப்பதற்கும் ஒப்பந்த உறுதிபோடுவதற்கும் உரிய செலவு ஆதனங்களை விலைமதித்தல் முதலியவைகளால் வரும் செலவும் பிணை உறுதிக்கு ஒட்டவேண்டிய முத்திரைச் செலவும் கேள்விக்காரன் கட்டவேண்டும்.

6. பிணையாகக்கொடுபடும் உறுதிகளிலுள்ள ஆதனங்கள் ஈடுமுதலியவைகட் குட்படவில்லையென்று கேள்விக்காரன் தன் செலவில் நிலப்பதிவு கந்தோரிலிருந்து ஓர் பத்திரம் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

7. யாழ்ப்பாண ஏசண்டரிடம் தேவையான மேலதிகமான விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம். போதிய கேள்விகள் கேட்கப்படாத குத்தகைகள் கேள்விப்பத்திரங்கள் திறந்து பரிசோதிக்கப்பட்டவுடன் அன்றையத்தினமே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

எஸ். எம். டவ்,
கவுண்மேந்து ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1934 ம் ஆண்டு பங்குனி௴ 8 ந் ௳

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 8 ம் பிரிவிற் சுட்டிய 1 ம் அட்டவணையின் B. பிரிவின்படி அறிவித்தல்.

மட்டுக்களப்பு தாமரைக்கேணி அம்பலவாணர் கணேசமுதலி ஆகிய நான் என்னை மட்டுக்களப்பு டிஸ்திறிக்கிலே தமிழ்ப் பாஷையில் வேலைபார்க்கும் நொத்தாரிசுவாக ஏற்றுக்கொள்ளும்படி இன்று தொடக்கம் மூன்று மாசங்களுக்குப்பின் பதிவுகாரியஸ்த தலைவர் அவர்கட்கு விண்ணப்பஞ் செய்ய எண்ணியிருக்கிறேன் என்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

அ. கணேசமுதலி.

தாமரைக்கேணி, மட்டுக்களப்பு,
1934 ம் ௵ மாசி௴ 22 ந் ௳.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.